# கவிஞர் வாலியின் படைப்புகள்

[1]**கு வித்யா,** முனைவர் பட்ட ஆய்வாளர்,
https://orcid.org/0009-0006-8646-4675

***அ முனைவர் பா சகாயராஜ்**, பேராசிரியர் மற்றும் புலமையர்,
https://orcid.org/0000-0002-1572-3549

*1தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலை பல்கலைக் கழகம், சென்னை - 78.

**ஆய்வுச்சுருக்கம்**

திரையுலக வரலாற்றில் கவிஞர் வாலி ஒரு அழிக்க முடியாத அத்தியாயம். மக்கள் மனதிற்குப் பிடித்தமான கவிஞர்கள் ஓவ்வொரு காலகட்டத்திலும் தோன்றுகிறார்கள். இத்திரையுலகில் காவியக் கவிஞர் என்று இலக்கிய உலகிலும், வாலிபக் கவிஞர் என்று திரையுலகிலும், புகழ்ப்பட்டவர் கவிஞர் வாலி. திரையுலகிலேயே அதிகமான திரைப்பாடல்களைப் பாடிய பாடலாசிரியர் எனக் கருதப்படுகிறார். நாடகத்தில் உச்சியைத் தொட்ட கவிஞர் வாலி சிறுகதைகள் மற்றும் நடிகராகவும், தொலைக்காட்சித் தொடரிலும் நடித்துள்ளார். கவிஞர் வாலியின் படைப்புகள் பல கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் மற்றும் புராணக்கதைகளில் வரும் தெய்வீக வரிகளுக்கு மயங்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. அதே போல் கவிஞர் வாலி சமுதாய நலத்தை அடிப்படையாகக் கொண்டு காதல், ஊடல், காமம், சோகம், மகிழ்ச்சி மற்றும் ஏக்கம் என அனைத்துக்கும் உயிர் தந்து அழகுக்கு அழகு சேர்த்து உருகவைத்து விடுவார். இலக்கியத்திற்குக் களம் இன்றியமையாதது என்னும் கருத்துகோளின் அடிப்படையில் “கவிஞர் வாலியின் படைப்புகள்” என்னும் தலைப்பை ஆய்வுப் பொருளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**முன்னுரை**

தமிழ்த்திரை உலகம் கண்ட முக்கிய படைப்பாளிகளுள் ஒருவர் கவிஞர் வாலி. இதிகாசங்களையும் தமிழ் இலக்கியங்களாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு. தமிழ் சினிமாவில் ‘கண்ணதாசனுக்குப் பின் கவிஞரென்றால் அது இவர்தான்’ எனப் புகழப்பட்டவர். திரைப்பட உலகின் இசைத் துறையில் ஒரு மிகப்பெரிய வெற்றிடம் ஏற்படாமல் பார்த்துக் கொண்ட பெருமை கவிஞர் வாலியை மட்டுமே சேரும். திரை உலகின் பாடல் சாம்ராஜ்யத்தில் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த கண்ணதாசனுக்கு இணையாகப் பாடல் எழுதி சரித்திரம் படைத்தவர். கவிஞர் வாலி சிறந்த அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள், இசையமைப்பாளர் ஆகிய ஆளுமைகளுடன் இணக்கமாக இருந்தமையால், பலருக்கு அவர் ஏற்றமாக இருந்தார். எம்.ஜி.ஆர் அவர்களின் அரசியல் ஏற்றத்திற்கு வாலியின் பல பாடல்கள் ஏணியாக அமைந்ததை யாராலும் மறுக்க முடியாது. அவரைத் தொடர்ந்து சிவாஜி, ஜெயசங்கர், ரவிச்சந்திரன், கமலஹாசன், ரஜினிகாந்த், விஜய், அஜித், சிவகார்த்திகேயன், விஜய்சேதுபதி ஆகிய

ஐந்து தலைமுறைகளுக்கான முன்னனி திரை ஆளுமைகளுடன்இளமை மாறாமல், ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்களின் மனதில் நீங்க இடம் பிடித்தவர். திரைப்பாடல்களோடு தன்னுடைய கவிதை ஆற்றலை நிறுத்தி விடாமல், இராமாயணம், மகாபாரதம், தமிழ்க் கடவுள், அம்பாள் அந்தாதி மற்றும் கிருஷ்ணா விஜயம் ஆகிய இதிகாச புராணப்படைப்புகளைத் தமிழில் எளிய வடிவில் கொடுத்து அனைவரையும் வியக்கச் செய்தவர் கவிஞர் வாலி.

**கவிஞர் வாலியும் தமிழும்**

கவிஞர் வாலியால் தமிழ் உயர்ந்தது. தமிழால் வாலி உயந்தார். தமிழ் இலக்கியத்தில் உள்ள வார்த்தைகளை வளைத்து அருமையான கவிதைகளை எழுதுவதில் வல்லவர் கவிஞர் வாலி. இலக்கியத்தில் உள்ள எதுகை, மோனை, கற்பனை ஆகிய இலக்கிய உத்திகளைப் படைத்தளித்தவர் கவிஞர் வாலி. திரைப்பாடப் பாடல்களை எழுதும் போது இசையமைப்பாளருக்கு ஒரு பல்லவிக்கு நான்கு பல்லவி எழுதிக் கொடுப்பார். அதே போல் ஒரு சரணத்துக்கு நான்கு சரணம் எழுதிக் கொடுப்பார். தமிழ் மொழிக்கே உரித்தான அழகியல் இனிமையும் வாய்பாடு போல் நெஞ்சில் ஒட்டிக் கொள்ளும் வலிமையும் கவிஞர் வாலியின் வரிகளுக்கு இருந்தவை.

**"காற்று வாங்க போனேன் - ஒரு**
**கவிதை வாங்கி வந்தேன்** 1 **இந்த**
**புன்னகை என்ன விலை?** 2
**தரைமேல் பிறக்க வைத்தான் எங்களைத் தண்ணீரில்**
**பிழைக்க வைத்தான்"** 3

என்ற புகழ்வாய்ந்த வரிகளை எழுதியவர் கவிஞர் வாலி ஆவார்.

திரையிசைப் பாடலில் எதுகை, மோனை இரண்டையும் விட கடை இயைபுகளில் அதிகக் கவனம் செலுத்தியவர் கவிஞர் வாலி. இதனை,

**காதலன் பேரைச் சொல்லிக் கொண்டு**
**காத்திருந்தாளாம் அல்லித்தண்டு**
**நிலவில்லாமல் எது வந்தாலும் அல்லி**
**மலருமா? - அது**
**நிலவைத்தவிர வேறு யாரும்**
**சொல்லி மலருமா?** 4 என்ற பாடல் வரியில் உணரலாம்.

**கவிஞர் வாலியும் இறைப்பற்றும்**

'கண்ணனைக் கொண்டாடுதல்' என்பது ஆழ்வார்கள் காலந்தொட்டு தமிழகத்தில் காணப்படும் ஒன்று. அதன் நீட்சியாகத் தற்காலத்தில் எழுதப்பட்ட 'கிருஷ்ண விஜயம்' கண்ணனை நாயகனாகவும், இளம்பருவ நிகழ்வுகளைக் கொண்டு அமைந்துள்ளது. தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய கண்ணனை கீழ்வாருமாறு,

**“புயலரக்கன் ஆவியைப்**
**பூமாலையாய்த் தரித்தவனே**
**பொல்லாக் கஞ்சன் கண்ணுக்குப்**
**புகையாய்க் கரித்தவனே!”** 5

எனும் பாடலில் கண்ணனின் பெருமைகளை மக்களின் மனங்களில் நிங்காதவாறு இறைப்பற்றினை விதைத்தவர்.

கவிஞர் வாலி சிறுவயதிலிருந்தே முருகன் மீது அதிக பற்று உடையவர். அம்முருகனின் வேல் பற்றிய பெருமையையும், திருநீற்றின் மகிமையையும் குறித்து எழுதுவது என்றால் முதலிடம் தருவார். அவரின் உதடுகள் எப்போதும், முருகா என்றுதான் உச்சரிக்கும். இதனை,

**அருகாப் புகழும் கருகாப் பொருளும்**
**முருகா எனில்வரும் முன்னே- பெருகால்**
**பெயர்க்கொணாப் புல்போல் பெயர்பெயரா தென்றும்**
**உயர்த்தொணா உச்சம் உயர்.**6

எனும் பாடலில் முருகா எனச் சொன்னால் பிறர் யாராலும் நம்மைத் தொடமுடியாத உச்சத்தை அடையலாம் எனக் குறிப்பிடுகிறார்.

**கவிஞர் வாலியும் சமுதாயமும்**

சமுதாய நாட்டம் கொண்ட கவிஞர்களில் இவரும் ஒருவர். சமுதாயத்திற்கு தேவையான கருத்துகளை எளிய முறையில் வாக்கியங்களாகப் படைத்துள்ளார். சாதிக் கொடுமை, மகளிர் மேம்பாடு, விலைவாசி உயர்வு, கலப்புத் திருமணம், பெண் சொத்துரிமை, பெண் உடன் கட்டை ஏறுதல் ஆகியவைக் குறித் அவருடைய கவிதைகள் நமக்கு உணர்த்துகின்றன.

**சாதிக்கொடுமை**

சமுதாயத்தை மேம்படுத்த முனைந்து அதற்காகவே உழைக்கின்ற மக்களை நிறம், மதம், சாதி என்று பெயரால் பல கொடுமைகள் நடப்பது வேதனைக்குரியது. சாதியின் பெயரால் சகமனிதனை இழிவாகப் பார்ப்பதும், அவமானப்படுத்துவதும், அடிமைப்படுத்துவதும் கொடிய நோயை அப்புறப்படுத்தவே எழுதப்பட்ட நூல்களிலும் மற்றவர்களுக்கு உபதேசம் செய்துபோலவும் சாதிப் பெருமையை வளர்த்து வருவதையும் காண்கிறோம். சாதியற்ற சமுதாயம் படைக்க அனைவரும் கைகோர்த்து நிற்போம் என்று பரப்புரை செய்து, தேர்தல் காலத்தில் “எனக்கே ஓட்டுப் போடுங்கள்” ஏனென்றால் நான் உங்கள் சாதியைச் சார்ந்தவன் என வாக்காளர்களிடம் வேண்டுகோள் விட்டு கடைசியாக தாழ்த்தக்குரலில் வேட்பாளர்கள் கூறும் வகையில், நினைவில் இருக்கட்டும்

**நான்**
**உங்கள்**
**ஜாதிக்காரன்**7

என்று சாதியை நினைவூட்டி வாக்குகள் கேட்கும் இழிநிலையில் மனிதர்கள் இருக்கின்றார்கள் என்பதை கவிஞர் வாலியின் வரிகள் உணர்த்துகிறது.

**மகளிர் மேம்பாடு**

கல்வி மறுக்கப்பட்டதாலே பெண்களின் முன்னேற்றம் தடைபடுகிறது. இதனை வலியுறுத்திப் பல சீர்திருத்தாவதிகள் பெண்களைக் கல்வி கற்க ஊக்கமூட்டினர். கவிஞர் வாலியும் பெண்ணினத்தை,

**“அலப்படி**
**அகலப்படி உனக்கு**
**அனைத்து பாடல்களும்**
**ஆகவேண்டும் அத்துபடி”**[8]

எனப் படித்தால் மட்டுமே பெண்களின் வாழ்வில் முன்னேற்றம் வரும். எனவே, படிப்படி என்னும் கவிதைகள் வழி, அடி பெண்ணே! பெண்ணுக்கு முக்கியம் படிப்பு என்று கல்வி கற்குமாறு வலியுறுத்துகிறார் கவிஞர்.

**விலைவாசி கொடுமை**

நல்ல திட்டங்களை வரவேற்பது, ஏழை எளிய நடுத்தர மக்களை வஞ்சிக்கும் திட்டங்களைப் பற்றி அரசுக்கு எடுத்துக்காட்ட வேண்டியது சமுதாய சிந்தனையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், படைப்பாளர்கள் மேல் விழுந்த கடமையாகும். மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு அதிக வரி என்கிற பெயரில் அனைத்தும் மக்கள் மேல் சுமத்தியிருப்பதையும் கவிஞர் கண்டித்துள்ளார். இதனை,

**ஆணைவிலை; குதிரை விலை**
**குபேரனுக்கும் வரலாம்**
**மலையேற்றம் போல்**
**விலையேற்றம் நான்**
**ஏறுகிறேன் என்பதால் தான்**
**ஏறுகிறேன் என்கிறது கோயம்பேடு**
**கோவக்காய்; ஆவக்காய்**
**அடியேன் மலைவாசி; அது**
**போல் ஆக விரும்புகிறது விலைவாசி**[9]

எனக் விலைவாசி ஏற்றத்தைக் கண்பிக்கிறார். நாட்டு மக்களின் அன்றாட வாழ்வில் ஒருவரோடு ஒருவர் சார்ந்து வாழும் வாழ்க்கையை வாழ்கின்றனர். பெட்ரோல் விலையை அரசு உயர்த்தினால் போக்குவரத்துக்காரர்கள், இரு சக்கர வாகனத்தினர்களுக்கு மட்டுமே பிரச்சனை இல்லை அது அடித்தள மக்களான ஏழைக் குடிசையில் வாழும் மனிதன் தொடங்கி ஆகாய விமானத்தில் பறக்கும் மனிதன் வரை பாதிக்கிறது. கடுமையான விலைவாசியால் பெரும் பணக்காரர்கள் பாதிப்படைவதை விட ஏழைகள் பாதிப்படைவதே பெருங்கொடுமை என வேதனையை வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர் வாலி. விலைவாசி ஒவ்வொரு தனிமனித குடும்பத்தையும், பாதிப்பதினால் ஒரு நல்ல அரசு

மக்களை கொடுமைப்படுத்தாமல் மக்களின் சுமையைக் குறைக்க முன்வர வேண்டும். இக்கருத்தின் மூலம் அடித்தள மக்களின் மேல் அக்கறை கொண்டவராகவும், மனித நேயத்தன்மைக்குச் சான்றாகவும், அமைகிறது இந்தக் கவிதைவரிகள்.

**கவிஞர் வாலியும் அரசியலும்**

அரசியல் நெடி வீசும் பல பாடல்களுக்குச் சொந்தக்காரர் கவிஞர் வாலி. அரசியலில் எம்.ஜி.ஆர் அவர்களின் பெரும்பாலான பாடங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார்.

**“மூன்றெழுத்தில்**
**என் மூச்சிருக்கும் அது முடிந்த பின்னாலும்**
**பேச்சிருக்கும்”**10 **- என் கடமை** என்ற பாடல் எம்.ஜி.ஆர் அவர்களின் அரசியல் எழுச்சிக்குப் புத்துயிருட்டியது. தி.மு.க.வில் இருந்த காலத்தில் அவரின் சமூக அரசியல் செல்வாக்கை மனதில் வைத்து பாடல்களை எழுத ஆரம்பித்தர். அந்த பாடல்கள் எல்லாம் ஏழை எளிய மக்களின் உள்ளங்களில் போய் எம்.ஜி.ஆர் அமர்ந்து கொள்ள இன்னும் உதவியாக இருந்தது. அந்த மூன்றெழுத்து பாடல்கள் கதாநாயகன் எம்.ஜி.ஆருக்கா எழுதப்பட்ட பாடல் வரிகள். மேலும்,

**“நான் ஆணையிட்டால்**
**அது நடந்துவிட்டால்……. ”**11 **- எங்க வீட்டுப் பிள்ளை**

**“நான் செத்துப் பிழைச்சவண்டா எமனை**
**பார்த்து சிரிச்சவண்டா …..”**12 **- எங்கள் தங்கம்**

**“ஏன் என்ற கேள்வி இன்று**
**கேட்காமல் வாழ்க்கை இல்லை….”**13 **- ஆயிரத்தில் ஒருவன்** ஆகிய பாடல்களெல்லாம் எம்.ஜி.ஆருக்கு மட்டுமே பொருத்தமாக அமையுமாறு எழுதினார்.

திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்கு திரைவடிவத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டவர். படகோட்டி திரைப்படத்தில் எம்.ஜி.ஆருக்காக கவிஞர் வாலி எழுதிய பாடல்

**“கொடுத்த்தெல்லாம் கொடுத்தான் - அவன்**
**யாருக்காக கொடுத்தான் - உன்**
**ஒருத்தருக்கா கொடுத்தான் – இல்லை**
**ஊருக்காகக் கொடுத்தான்”**14

முதலான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முதல் கொள்கைப் பாடல்களை எழுதி எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் திராவிட இயக்க அரசியலுக்கும் ஒரு உந்து சக்தியாக விளங்கினார் கவிஞர் வாலி.

**கவிஞர் வாலியும் தனது தாயாரும்**

கவிஞர் அவர்கள் பாடல் எழுதுவதில் சிறந்தவர். தன் தாயைப் போலவே அனைத்து தாய்மார்களையும் மனதில் வைத்துக்கொண்டு பாடல் எழுதுவதில் இவருக்கு நிகர் இவரே!

**"அம்மா என்றழைக்காத உயிரில்லையே அம்மாவை வணங்காது உயர்வில்லையே….."**15 **-மன்னன்** இந்த இரண்டு வரிகளே போதும் தாயில்லாமல் இந்த உலகமே இல்லை என்பதை மன்னன் பாடத்திற்காக கவிஞர் வாலி எழுதிய பாடல். தாயின் பெருமையை எடுத்துக்காட்டடும் பாடியாக அமைந்திருக்கும் பல பாடல்களை இயற்றியுள்ளார். **"தாயில்லாமல் நானில்லை தானே எவரும் பிறந்ததில்லை…."**16 **- அடிமைப்பெண்** **"அம்மா அம்மா எந்தன் ஆருயிரே நானும் நீயும் என்றும் ஒருயிரே…."** 17 **- உழைப்பாளி** **"நானாக நானில்லை தாயே நல்வாழ்வு தந்தாயே நீயே…"** 18 **-தூங்காதே தம்பி தூங்காதே** **"சின்னத்தாயவள் தந்த ராசாவே முள்ளில் தோன்றிய சின்ன ரோசாவே…."** 19 **- தளபதி** முதலான பாடல்களிலும் தனிச்சிறப்பாக சின்னத்தாய் என்பவர்கள் திரை இசைஞானி இளையராஜாவின் தாயார். அந்தத் தாயரை முன்னிலைப் படுத்திடும்படி மனதில் வைத்து தான் இந்த வரிகள் எழுதப்பட்டது. மேலும் நான்கு தலைமுறையினர்க்கும் பாடல்கள் எழுதியவர்களுள் மிகவும் சிறப்புப் பெற்றவர் வாலி.

**"ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசியிருந்த வாங்கலாம்**
**அம்மாவ வாங்க முடியுமா"**20 **- வியாபாரி**

**"காலையில் தினமும் கண்விழித்தால்**
**நான் கை தொழும் தேவதை அம்மா**
**அன்பென்றாலே அம்மா "**21 **- நியூ**

ஆகிய பாடலில் தாயைப் பற்றியும். 'அன்பென்றாலே அம்மா' எனும் வரியில் தாய்மையைப் பற்றியும் மிக அழகாகவே எழுதிருப்பவர் கவிஞர் வாலி. அம்மா என்று வணங்கி பெண்களின் இதயத்தில் இடம் பிடித்த பிறகுதான் எம்.ஜி.ஆர் மிகச்சிறந்த நடிகரானார். அதே போல் **"அம்மா என்று அழைக்காத உயரில்லையே…"** என்று கவிஞர் வாலி எழுதிய வரிகள் ரஜினியை தாய்மாரின் உள்ளங்களில் எல்லாம் ஆசனம் போட வைத்து அவருக்கு முதன்மையான இடத்தைப் பெற்றவர் என்ற பெருமையைத் தேடித்தந்தது. கவிஞர் வாலி தனது அம்மாவைப் பற்றி,

**'எனக்கு**
**வேலை வெட்டி**
**கிடைக்க வேண்டுமென்று_**
**அம்மா_**
**வேண்டாத தெய்வமில்லை'……** 22

என்று அம்மாவை ஆராதிக்கும் கவிஞராக வாலி திகழ்வதைக் காணலாம்.

**கவிஞர் வாலியும் காதலும்**

தத்துவப் பாடலும், இறைப்பற்றுப் பாடல்கள் மட்டும் எழுதி வந்த கவிஞர் காதல் பாடல்களும் எழுதமில்லை. இவர் எழுதிய காதல் பாடல்களை இன்று கேட்டால் கூட எழுபது வயது நிறைவுபெற்ற ஒரு எழுத்தாளர் என்று எவரும் சொல்ல மாட்டார்கள். உதாரணமாக சில பாடல்கள்,

**“நிலாவே வா**
**செல்லாதே வா……”23 – மௌன ராகம்**
**“முன்பே வா என் அன்பே வா**
**ஊனே வா உயிரே வா……” 24 – ஜில்லுனு ஒரு காதல்**
**“என்ன விலை அழகே சொன்ன**
**விலைக்கு வாங்க வருவேன்…..”25 – காதலர் தினம்** கவிஞர் வாலி அவர்கள் எல்லாம் தலைமுறைக்கு ஏற்றவாறு பாடல்களை எழுதிய பெருமை அவரையே சேரும்.

**“அரபு நாடே அசந்து நிற்கும் அழகியா நீ” - தொட்டால் பூ மலரும்26** என்ற படத்தில் கதாநாயகி ஒரு இஸ்லாமியப் பெண் போல வேடம் அணிந்து முகத்தை மூடி இருப்பார். அந்த சூழலுக்கு ஏற்றவாறு கவிஞர் வாலி அழகான வரிகளை எழுதியிருகிறார்.

**கவிஞர் வாலியும் நட்பும்**

நண்பர்கள் ஒருவருக்கொருவர் அன்புடையவர்களாகவும், எந்த சூழ்நிலையிலும் விட்டுக்கொடுக்காதவர்களாகவும் இருப்பவர்கள். இதனை கவிஞர் வாலி எழுதிய நண்பர்களுடன் இருக்கு நட்பு பற்றிய பாடல்கள் ஏராளம். நட்பின் அளவற்ற அன்பை வெளிக்காட்டும் விதமாக எழுதிய பாடல்

**“நண்பன் ஒருவன் வந்த பிறகு**
**விண்ணை தொடலாம் உந்தன் சிறகு**
**வானுக்கும் எல்லை உண்டு நட்புக்கில்லையே27 – காதல் தேசம்**
**“என் நண்பன் போட்ட சோறு நிதமும் தின்னேன் பாரு**
**நட்பைக் கூட கற்பைப் போல என்னுவேன்…”28 – தளபதி**

ஆகிய திரைப்படப்பாடல்களில் இரு நண்பர்களின் நட்பினை உயர்த்திபேசும் நட்பைக் கூட கற்பைப் போல என்னுவேன் உன்னதத்தை வடித்துள்ளார் கவிஞர் வாலி.மேலும்,

**“தென்றல் போன்ற நண்பன் தான் தீயைப்**
**போல மாறினான் சொன்ன**
**வார்த்தை மீறினான்…”29**

சட்டம் படத்தில் இடம்பெற்ற ஒரு நண்பனின் கதை இது. உயிருக்கு உயிரான இரண்டு நண்பர்கள் இடையே ஏற்படும் மனக்கசப்பினை வெளிப்படுத்தும் விதமாக எழுதியிருப்பார் கவிஞர் வாலி. காட்சிக்குப் பொருத்தமாக பாடல் எழுதுவதில் இவருக்கு நிகர் இவரே என்பதை இப்பாடல் வரிகளில் உணரலாம்.

**நிறைவுரை**

காலத்திற்கு ஏற்றவாறு பாடல்கள் பாடுவதில் வெற்றி கண்டவர் கவிஞர் வாலி. இவர் திரைக்கலைஞர் எம்.ஜி.ஆர் திரைப்படங்களுக்குப் பாடல் எழுதியது போற்றுதற்குரியது. கவிஞர் வாலியுடன் அன்றைய இயக்குனரிலிருந்து இன்றைய திரைக்கலை இயக்குனர் வரை இணைந்து பணியாற்றியுள்ளார். நான்கு தலைமுறைகளைத் தாண்டியும் புதிதாக அறிமுகமாகும் கதாநாயகர்களுக்கும் பாடல்கள் எழுதுமளவுக்கு, அனைத்துத் தலைமுறையினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு படைப்பாளிக் கவிஞர் வாலி. இவர் இறப்பதற்கு முன்பு ஒரு விழாவில் எனது ஏற்றத்திற்கு உதவியவர்களை மறவாமல் பதிவு செய்தார். எனக்கு இன்று இருக்கும் பணம், வசதிகள் அனைத்தும் எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களால்தான், சோற்றுக்கே வழியில்லாமல் இருந்தவன். வசதிகள் வந்தபிறகு சோறு திண்ணவே நேரம் இல்லாதவன்" என்று பேசியபோது செஞ்சோற்றுக் கடனாகவே நினைத்து நன்றி சொன்னவர். இவர் "காவியத்தலைவன்" எனும் திரைப்படத்திற்கு எழுதிய 'அல்லி அர்ச்சுனா' எனும் பாடலே இறுதிப் பாடலாக திரையிசைத்துறையில் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**பயன்பட்ட நூல்கள்**

1. கவிஞர் வாலி, சரவண சதகம், வாலி பதிப்பகம், முதல்பதிப்பு, டிசம்பர் 2018.
2. கே. இளந்தீபன். வணக்கம் வாலி, முதல் பதிப்பு, 2017, சென்னை - 89.
3. நெல்லை ஜெயந்தா, வாலி 100, டிசம்பர் 2013, சென்னை- 05.
4. வீ. பாரதிராஜா. கவிஞர் வாலியின் படைப்புகளின் சமூக சிந்தனை, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், தொகுதி-2, ஆகஸ்ட்- 2023.
5. ரா.ராஜேஸ்வரி. கிருஷ்ண விஜயத்தின் வழி கவிஞர் வாலியின் மொழியாளுமை, சர்வதேசத் தமிழ ஆய்விதழ், தொகுதி-3, மார்ச் 2021